
பக்கங்கள்:08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 01 சனிக்கிழமை 18.10.2025 கதிர் 342



## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியப் பேரவை எனப்படும் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்திலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும்ஜனநாயகத்தமிழ்த் ☞2

## சுகாதாரத்துறை மேம்பாட்டுக்காக இலங்கைக்கு 100 மி. டொலர் கடன்

### ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகிறது

இலங்கையின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 100 மில்லியன் டொலர் கடனுக்கான ஒப்பந்தத்தில் ஆளும்தரப்பு கையெழுத்திட்டுள்ளது. நிதியமைச்சின் தகவல்களுக்கமைய இந்தக் கடனுக்கானஒப்பந்தத்தில், இலங்கை சார்பில் நிதியமைச்சின் செயலாளர் ஹர்ஷனா சூரியப்பெருமவும், ஆசிய அபிவிருத்தி வங்கி சார்பில் அதன் இலங்கைக்கான பணிப்பாளர்தகஃபுமிகடோனோவும் கையெழுத்திட்டுள்ளனர்.

இக்கடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்கள் திட்டத்தின் ஊடாக வழங்கப்படுகிறது. இக்கடனுதவி, சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய மூலோபாயக் கட்டமைப்பிற்கு ஆதரவளிப்பதுடன், இது இரண்டாம் நிலைச் சுகாதார சேவைகளின் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கும், அனைவருக்கும் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும்முதல்பரிந்துரைச் ☞2

## இந்தியப் பிரதமரைச் சந்தித்து பிரதமர் ஹரினி நேற்று பேச்சு



அரசுமுறைப்பயணமாக இந்தியா சென்றுள்ள பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, நேற்று இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியைப் புது டில்லியில் சந்தித்தார்.

கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் அபிவிருத்தி முன்னுரிமைகள் குறித்து இந்தச் சந்திப்பில் குறிப்பாகக் கவனம் செலுத்தப்பட்டதுடன், ☞2

## போதைப் பொருள் வர்த்தகத்தை முற்றிலும் இல்லாதொழிப்பேன்

### அதற்கு ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டும் - அநுர



போதைப்பொருளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். போதைப்பொருள் வர்த்தகம் என்ற இரும்பு கதவினை திறந்துள்ளோம். இதன் விளைவை நன்குஅறிவோம். போதைப்பொருள் வர்த்தகத்தை முழுமையாக இல்லாதொழிப்பேன். சிறந்த இளைஞர் சமூகத்தை உருவாக்க வேண்டுமாயின் இந்த கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அரசுத் தலைவர் அநுரகுமார வலியுறுத்தினார். ☞2

## தங்கத்தின் விலை நேற்று ரூ. 4 லட்சத்தைக் கடந்தது

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக தங்கப் பவுண் ஒன்றின் விலை 4 இலட்சத்தைக் கடந்துள்ளது. அதற்கமைய 24 கரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை 4 இலட்சத்து 10 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக கொழும்பு - செட்டியார் தெரு தங்க சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

வியாழக்கிழமையுடன் ஒப்பிடும்போது நேற்று தங்கப் பவுண் ஒன்றின் விலை 15 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது. அதேவேளை 22 கரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை நேற்றைய ☞2

## மாகாணத் தேர்தலை நடத்தவைக்க ஆளும்தரப்புக்கு அழுத்தம் தாருங்கள்

### தமிழ் பேசும் கட்சிகளிடம் வரதராஜப் பெருமாள் கோரிக்கை

மாகாண சபைத் தேர்தலை ஆளும்தரப்பு உடன் நடத்துவதற்கான அழுத்தத்தை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள அனைத்து கட்சிகளும் இலங்கையில் உள்ள அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் இணைந்து வழங்கவேண்டும் என்று இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபை ஒரே முதலமைச்சரான வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைத்தேத்தல்தொடர்பில்ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள கட்சிகளோடு நான் அண்மையில் கலந்துரையாடியிருந்தேன். மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக எந்த வகையான காரணமும் சொல்லிக் காலம் தாழ்த்தாமல் உடனடியாகவைக்கவேண்டும். இந்தக் கோரிக்கையை தமிழ் பேசுகின்ற மக்கள் மத்தியில் உள்ளஅனைத்துக்கட்சிகளும்இலங்கையினுடைய அனைத்து கட்சிகளோடும் இணைந்தும் தனித்தனியாகவும் முன்வைக்கவேண்டும் என்ற இணக்கத் தோடு இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது என்று என்று நான் நினைக்கிறேன்.

தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதை இலங்கை மக்கள் அனைவருடைய ☞2

## சம்பள நிர்ணய சபையை கம்பனிகள் புறக்கணிப்பு

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு குறித்த பேச்சுக்காக மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் எச்.ஜீ.எப். குணவர்தனவினால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கமைய நேற்று வெள்ளிக்கிழமை சம்பள நிர்ணய சபை கூடியது. கொழும்பு, நாரஹேன்பிட்டவிலுள்ள தொழில் திணைக்களத்தில்பிற்பகல்2மணிமுதல் சுமார் ஒரு மணித்தியாலம் இக்கூட்டம் இடம்பெற்றது. எவ்வாறிருப்பினும் இதில் பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொண்டிருக்கவில்லை.

கம்பனிகள் இவ்வாறு முதற்கட்டக் கூட்டங்களை புறக்கணிப்பதும்,உதாசீனப்படுத்துவதும்வழமையான விடயமாகும். ஆனால் கடந்த காலங்களில் இந்த பேச்சுக்களில் ஆர்வமாகப் பங்கேற்ற ஜே.வி.பி. தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதியும் தற்போதைய பதுளை மாவட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜ்ஜும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. இது குறித்து அவரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வினவியபோது தான் பதுளையில் இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார். ☞2

## பெருந்தோட்ட தொழிலாளர் சம்பளத்தில் ஆளும்தரப்பு அக்கறை காட்டவில்லை

### தொழிற்சங்கங்கள் கவலை

அரச உத்தியோகத்தர்களுக்கு 2029ஆம் ஆண்டு வரை சம்பள அதிகரிப்பிற்கான திட்டமிடலை அரசுத் தலைவர் அநுரகுமார நடைமுறைப்படுத்தியுள்ளார். ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் அரசுத் தலைவர் தலைமையிலான இந்த ஆளும்தரப்பு அந்தளவுக்குஅக்கறைகாண்பிக்காமை கவலைக்குரியது. அதேவேளை நீதிமன்ற உத்தரவுக்குகூட மதிப்பளிக்காமல் பெருந்தோட்ட கம்பனிகள் சம்பள நிர்ணயசபையை புறக்கணித்துள்ளமையை தாம் கடுமையாக எதிர்ப்பதாக பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

விசேட சம்பள நிர்ணய சபையைக் கூட்டுமாறு சபையின் இரு அங்கத்தவர்களால் ☞6

## அரச காணியை தனிநபருக்கு வழங்க லஞ்சம் பெற்ற அரச அதிகாரி கைது

அரசுக்குச்சொந்தமான காணியை தனிநபர் ஒருவருக்குவழங்கி 22 இலட்சம்ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்ற தியலும விவசாய சேவை மத்திய நிலையத்தின் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹவபகுதியில் உள்ள நபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்திருந்த அதிகாரிகள் குறித்த அதிகாரியைக் கைது செய்துள்ளனர்.

மஹவ பகுதியில் உள்ள ஆளும்தரப்புக்குச் சொந்தமான 20 ஏக்கர் காணி ஒன்றை கையகப்படுத்தி, அந்நிலத்தில் விவசாய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளராக இருந்தஅதிகாரிஒருவர்விளைச்சல்மேற்கொண்டு வந்தார்என்று தெரியவந்துள்ளது. இந்நிலையில் குறித்த காணியிலிந்து 12 ஏக்கர் நிலத்தை முறைப்பாட்டாளரிடம் பயிர்செய்கைக்காக வழங்கியுள்ளார். விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளராக இருந்த அதிகாரி ☞6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தேசியக் கூட்டணிக்கும் இடையிலான 'கொள்கை ஒப்பந்தம்' குறித்த சர்ச்சை நீடிக்கிறது. அந்த ஒப்பந்தத்தை தமது கூட்டாளிக் கட்சிகள் மதிக்கவில்லை என்று கஜேந்திரகுமார் தெரிவித்தாலும் ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுகிறார் என்று அவர் அறிவிக்கத் தயங்குகிறார். அதற்குப் பதிலாக ஒப்பந்தத்திலிருந்துஜனநாயகக்கூட்டணியினர் தாமாகவே விலகி விட்டனர் என்பதாகவே கருதப்படும் என்று பந்தை அவர்கள் பக்கம் அடித்து விட்டிருந்தார் கஜேந்திரகுமார். அது பற்றி நேற்று இந்தப் பத்தியில் விரிவாகத் தெரிவித்திருந்தேன்.

கஜேந்திரகுமாருக்கான பதிலை நேற்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர்சுரேஸ்பிரேமச்சந்திரன்வழங்கினார். யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், 'கொள்கை ஒப்பந்தம்' எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. அதற்கு கஜேந்திரகுமார் வழங்கும் விளக்கம், வியாக்கியானம்தான் புதிதாக இருக்கின்றது என்று தெரிவித்திருக்கிறார்.

கஜேந்திரகுமாரோ, ஒற்றையாட்சியின் கீழான 'ஏக்கிய ராஜ்ஜிய' அரசமைப்பை மக்களைஏற்றுக்கொள்ளவைப்பதற்காகத்தான் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ பி ஆர் எல் எவ் தனது முன்னாள் முதலமைச்சரான வரதராஜப்பெருமாளையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டு குத்திமுறிகிறது என்கிறார். பதிலுக்குசுரேஸ்பிரேமச்சந்திரனோ, மாகாண சபை தேர்தல் நடத்தப்படவேண்டும் நாங்கள் அதிலே போட்டியிடுவோம், தேர்தல் தொடர்பில் பேசப்படவேண்டும் என்று கூறுகிற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் 13ஆம் திருத்தச் சட்டம் தேவை இல்லை என்றும் கூறி வருகின்றனர், இது தொடர்பில் அவர்களிடம்தெளிவான சரியான கருத்துக்கள் இல்லை' என்கிறார்.

சபாஷ்! சரியான போட்டி! மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கேட்டால் தங்களைத் தவிர்ந்தமற்றையதமிழ்க்கட்சிகள்அனைத்தும் ஒற்றையாட்சியை'ஏக்கியராஜ்ஜிய'வைஏற்கிற 'எட்டப்பர்கள்' என்கிறார் கஜேந்திரகுமார். பதிலுக்கு சுரேஸ் பிரேமச்சந்திரனோ, 'இவர்கள் (முன்னணியினர்) மாகாண சபைத் தேர்தல் நடந்தால் போட்டியிடுவார்களாம், முதலமைச்சராக வர ஆசைப்படுவார்களாம், ஆனால் அந்த மாகாண சபைகள் வருவதற்கு அடிப்படையான 13ஆவது திருத்தச் சட்டம் வேண்டாம் என்பார்களாம்' என்று பதிலடி கொடுத்திருக்கிறார்.

இதற்கிடையில் சுவிஸ் நாட்டிற்குச் சென்று வந்த கதை தொடர்பாகவும் கஜேந்திரகுமார் கடந்த சில வாரங்களாக அலப்பறை செய்து வருகிறார். சமஷ்டி தொடர்பில் ஆளும்தரப்பினருக்கு விளக்குவதற்கான ஒழுங்குசெய்யப்பட்ட பயணம் இதுவென்றும், தாங்கள் ஏற்கனவே சுவிஸ் நாட்டுத் தூதரகத்திடம் விடுத்த வேண்டுகோளையும் கருத்தில் கொண்டு இந்தப் பயணம் ஒழுங்கு செய்யப்பட்டது என்றும் கஜேந்திரகுமார் ஒரு பேட்டியில் சொல்லியிருந்தார். ஆனால் உண்மை அதுவல்ல, இலங்கை - சுவிஸ் நாடாளுமன்ற நட்புறவுக் குழுவின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு பயணமே இது. அரசமுறை உறவுகளின்படி இரு நாடுகளுக்கும்இடையிலானஅரசஉறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட பயணம் இது. இதன் மறைமுக நோக்கங்களில் ஒன்று சமஷ்டி பற்றிய கலந்துரையாடல்களை முடிந்தவரையில் ஏற்படுத்துவது. ஆளும்தரப்பான என்பிபியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலரும் புதியவர்களாக இருப்பதால் அவர்களுக்கு சமஷ்டி, அதன் பயன்கள் குறித்து அறிமுகப்படுத்துவது எதிர்காலத்தில் தீர்வுகள் குறித்த கலந்துரையாடல்களுக்கு உதவிகரமாக இருக்கக்கூடும் என்பது ஒரு எதிர்பார்ப்பு மட்டுமே. 2002இல் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்ட பின்னரான அமைதிக் காலத்திலும் இதுபோன்ற பல்வேறு பயணங்கள், சமஷ்டி பற்றிய கலந்துரையாடல்கள் பயணங்கள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் அதன் பெறுபேறு எதுவும் வியந்துரைக்கக் கூடியதாக இருந்ததில்லை. அதனால்தற்போதையசுவிஸ் பயணமும்ஏதோதீர்வைத்தந்துவிடக்கூடியது என்று கொள்வதற்கு இல்லை.

அப்படிப்பட்ட இந்தக் கூட்டத்தில் ஆளும்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் என்பிபியின் செயலாளர் ஆகியோர் 2016இல் ரணில் - மைத்திரி ஆளும்தரப்பின் காலத்தில் தொடங்கப்பட்ட அரசமைப்பு முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்து புதிய அரசமைப்பு ஒன்றை ஏற்படுத்த தமது ஆளும்தரப்புத் தயாராக இருக்கின்றது என்றும், அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டதாகப் பிரதமர் நாடாளுமன்றத்தில்தெரிவித்திருக்கிறார்என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அதனைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் கஜேந்திரகுமார், 'ஏக்கிய ராஜ்ஜிய' அரசமைப்பு வரைபை இந்த ஆளும்தரப்பு நிறைவேற்றப் போகிறது என்று வியாக்கியானம் செய்து வருகிறார். அவர் சொல்வதை மறுப்பதற்கும் இல்லை. அதேநேரம் அதுதான் நடக்கும் என்பதற்கான எந்தவித உத்தரவாதங்களும்கூடக்கிடையாது.

காரணம், என்பிபியின் தேர்தல் அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே என்பிபியினர் எங்கே சென்றாலும் அதைத்தான் சொல்வார்கள். அவர்கள் இப்படித்தான் மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவோம் என்று சொன்னார்கள். அதே தேர்தல் அறிக்கையில் அரசமைப்பில் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கு வழங்குவோம் என்றும் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையில் அவர்களாக அதற்கான எந்தவொரு முயற்சியையும் எடுக்கவில்லை. எனவே புதிய அரசமைப்பு முயற்சியை மட்டும் அவர்கள் செய்தேதான் தீர்வார்கள் என்று சொல்லவிடமுடியாது. அதேநேரம் கஜேந்திரகுமாரின் எச்சரிக்கை உணர்வையும் குறைத்து மதிப்பிடமுடியாது. அதற்காக அவரது மிகைப்படுத்தல்களையும்ஏற்கமுடியாது. இந்த விடயத்தையும் சுரேஸ் நேற்றுச் சுட்டிக்காட்டி கஜேந்திரகுமாருக்கு ஒரு குட்டு வைத்தார்.

''சுவிற்சர்லாந்தில் இடம்பெற்ற சமஷ்டி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட போது சுவிஸ் ஆளும்தரப்பு ஏதோ சமஷ்டித் தீர்வினை தமிழ் மக்களுக்கு வழங்க இருப்பது போன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தன்னுடையகருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

ஆனால் உண்மை அதுவல்ல. இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் தலைவர்களைசுவிஸ்ஆளும்தரப்புஅழைத்து, சமஷ்டி தொடர்பான ஒரு கருத்துருவாக்கதை வழங்குவதே சுவிஸ் பயணத்தின் நோக்கம் தவிர வேறு வேறு எதுவும் அல்ல'' என்றார் அவர்.

“அங்கு அதிகம் வந்தவர்கள் எம்.பி.பி - ஜே.வி.பி ஆளும்தரப்பைச் சேர்ந்தவர்கள் எனவே அவர்கள் மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்ரமசிங்க ஆட்சிக்காலத்தில் முன்வைக்கப்பட்ட யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விடயங்களை முன் கொண்டு செல்லப்படும் என்று தெரிவித்தார்கள் ஆனால் அது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரையும் அவர்கள் முன்னெடுக்கவில்லை. இந்த யதார்த்தத்தைகஜேந்திரகுமார்பொன்னம்பலம் விளங்கிக்கொள்ளவேண்டும்'' என்று குட்டினார் சுரேஸ்.

ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அனைத்து விடயங்களும் சொல்லப்பட்டுள்ளன. அது தொடர்பான அவர்களது கருத்துருவாக்கத்தில் தான் ஏதோ தவறு உள்ளது என்றும் சுரேஸ் தெரிவித்தார்.

மொத்தத்தில் 'கொள்கைக் கூட்டணி'யின் கொள்கை எதுவென்பதையே இனிமேல் கலந்துரையாடித் தான் தெளிவுபடுத்த வேண்டும் போல் இருக்கிறது. சுவிஸ் அரசு இதற்காக ஒரு பயணத்தை ஒழுங்கு செய்து கொடுத்தால் நல்லது என்று தோன்றுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சுஹததாஸ உள்ளக அரங்கில் நேற்றுநடைபெற்றதேசியஆசிரியர்மாநாட்டில் உரையாற்றுகையில்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர் சேவையில் காணப்படும் பிரச்சினைகள்மற்றும்அவர்கள்எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காண்பதுடன், நாடு எதிர்கொண்டுள்ள சவால்களுக்கும் தீர்வு காணவேண்டும். ஆசிரியர் சேவையில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு கொள்கை அடிப்படையில் தீர்வினை நிச்சயம் வழங்குவோம். புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவற்கு ஆசிரியர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில்தான் மக்கள் எமக்கு ஆட்சியதிகாரத்தை வழங்கினார்கள். ஆகவே அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது எமது பொறுப்பு, அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். பல ஆண்டுகாலமாகப் பின்பற்றிய அரசியல்,பொருளாதார நடவடிக்கைகளின் பிரதி பலனை நாட்டு மக்கள் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எதிர்கொண்டார்கள்.

நிலையான பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதுஎமதுபிரதானஇலக்காகும். சட்டத்தை முறையாகச் செயற்படுத்தாமல் பொருளாதார ரீதியில் மீட்சிப்பெற முடியாது. வரையறுக்கப்பட்ட சட்டத்தின் ஆட்சியை நாங்கள் விரிவுப்படுத்தியுள்ளோம். இலங்கையர்கள் அனைவருக்கும் சட்டம் பொதுவானது எவருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது.

2028 ஆம் ஆண்டுக்கு பின்னர் வெளிநாட்டு அரசமுறை கடன்களை செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடின் நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை அடைவோம்என்றுகுறிப்பிடுகிறார்கள். எவரும் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை. 2028ஆம் ஆண்டு கடன்களை திருப்பிச் செலுத்தககூடியவகையில்பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவோம்.

அரசியல்வாதிகளின் தனிப்பட்ட மற்றும் குறுகிய தேவைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டங்கள் மற்றும் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பிலும், அதனால் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பிலும் எதிர்வரும் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பல விடயங்களை முன்வைக்கவுள்ளேன்.

அரசியல்வாதிகள்மற்றும்ஆட்சியாளர்களின் தேவைக்காக அரசமைப்பைத்திருத்தம்செய்த காலம், சட்டமியற்றிய காலம் முடிவடைந்து விட்டது. நாட்டு மக்களின் குறிப்பாக எதிர்கால தலைமுறையினரின் நலனை கருத்திற்கொண்டு சட்டமியற்றுகிறோம்.

போதைப்பொருள் பாவனையில் இருந்து சிறுவர்களையும், இளைஞர்களையும் பாதுகாப்பது சவாலுக்குரியதாக உள்ளது. போதைப்பொருளுக்குஎதிராககடுமையானசட்ட நடவடிக்கை எடுக்கப்படும். போதைப்பொருள் வர்த்தகம் என்ற இரும்பு கதவினை திறந்துள்ளோம். இதன் விளைவை நன்கு அறிவோம். போதைப்பொருள் வர்த்தகத்தை முழுமையாக இல்லாதொழிப்பேன். சிறந்த இளைஞர் சமூகத்தை உருவாக்க வேண்டுமாயின் இந்தக் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

## தங்கத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் 13 800 ரூபாவால் அதிகரித்து 379 200 ரூபாவாகக் காணப்படுகிறது.

வியாழனன்று 24 கரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை 3,95 000 ஆகவும், 22 கரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை 3,65 400 ரூபாவாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாகாணத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையாகவும்தான் நான் பார்க்கிறேன். நடத்தப்பட வேண்டிய தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் இருப்பது அரசியல் யாப்புக்கும் விரோதமானது. அதிகாரத்தில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தியினர் காரணங்கள் எதையும் கூறாமல் மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும்.

அரசியல்கட்சிகளுடையதலைவர்களோடும் இலங்கையினுடையபல்வேறுசமூகங்களின் உடைய அரசியல் சமூக பிரமுகர்களோடும் நான் நடத்தி வருகின்ற சந்திப்புகள் தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்பதல்ல. தேர்தல் வந்தால்தான் எப்படி ஒரு கட்சி தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்று பிரச்சினையே வரும். அதுகுறித்துநான்அக்கறையும்செலுத்துவதற்கு இல்லை. யாருக்கு வாக்களிப்பது என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.

அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் மாகாண ஆட்சிக்கான தேர்தலை அரசை நடத்த வைப்பது எப்படி என்பதைப்பற்றியதுதான். மாகாணஆட்சிக்கான அதி காரங்களை எப்படி முழுமையாகவும் முறையாகவும் பெற்றுக்கொள்வது என்பது பற்றிய கலந்துரையாடலாகவும் அது அமைந்தது - என்றார்.

## சம்பள நிர்ணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வகையில் சம்பள நிர்ணய சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 10 பெருந்தோட்ட தொழிற்சங்கங்களில் 8 தொழிற்சங்கங்களும், ஆளும்தரப்பின் சார்பில் 3 நியமன உறுப்பினர்களும் தொழில் திணைக்களத்துக்கு வருகை தந்திருந்தனர். தொழிற்சங்கங்கள் சார்பில் இலங்கை தொழிலாளர் காங்ரஸின் சிரேஷ்ட சட்ட ஆலோசகர் மாரிமுத்து, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் முத்துக்குமார், விவசாய தோட்ட தொழிலாளர் காங்ரஸ் சார்பில் கிருஸ்ணசாமி, இலங்கை செங்கொடி சங்கத்தின் சார்பில் அதன் ஆலோசகர் மேனகா கந்தசாமி மற்றும் சந்திரசேன உள்ளிட்ட தொழிற்சங்க பிரதிநிதிகளே இதில் பங்கேற்றவர்களாவர்.

சம்பள நிர்ணய சபையைக் கூட்டுவதற்கு இரு தரப்பிலும் ஆகக் குறைந்தது இரு பிரதிநிதிகளாவதுபங்கேற்கவேண்டும்என்பதே கோரமாகும். எனினும் இம்முறை கம்பனிகள் சார்பில் ஒருவர்கூடப் பங்கேற்காததால் சட்ட ரீதியாக சபையை கூட்ட முடியாது என சம்பள நிர்ணய சபையின் தலைவர் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். இருப்பினும் இலங்கை செங்கொடி சங்கத்தின் சார்பில் அதன் ஆலோசகர் மேனகா கந்தசாமியால் இதன் போது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் தற்போதைய வாழ்க்கை செலவுக்கேற்ப 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் பேச்சு நடத்தி, நவம்பர் 20ஆம் திகதிக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை தொழில் அமைச்சர் அறிவிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே நீதிமன்ற உத்தரவுக்கமைய அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர்களால் தொழிற்சங்கங்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

கம்பனிகளுக்கு தேயிலை நிர்ணய சபை கூடவுள்ளதாக முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு பிரதிநிதியைத் தவிர வேறு எவரும் தம்மால் பிரசன்னமாக முடியாது என அறிவிக்கவுமில்லை. கம்பனிகளின் இந்த தன்னிச்சையான செயற்பாட்டுக்கு தொழில் ஆணையாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். இந்நிலையில்மறுதிகதிஅறிவிக்கப்படாமலேயே சம்பள நிர்ணய சபை ஒத்தி வைக்கப்பட்டது.

## சுகாதாரத்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சையாக செயல்படும்.

மேலும், இந்த நிதியுதவித் தொகுப்பில், தொற்றுநோய் நிதியத்தின் கீழ் முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட கடன்களின் அடிப்படையில் வழங்கப்படும் 6.9 மில்லியன் டொலர் பெறுமதியான வெளிப்புற நிதியளிக்கப்பட்டமானியமும்உள்ளடங்குவதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## இந்தியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தியப் பிரதமர் மோடி, இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரியவை அன்புடன் வரவேற்றதுடன், இருதரப்பு உறவுகளுக்கும் இரு நாடுகளுக்கும் இடையேயான பன்முக கூட்டாண்மைக்கும் புதிய உத்வேகத்தை அளிக்கும் அவரது இந்தப் பயணத்தைப் பாராட்டினார்.

தான் மாணவியாக இருந்த டில்லி பல்கலைக்கழகத்தின் இந்துக் கல்லூரிக்கு மேற்கொண்ட தனது உணர்ச்சிபூர்வமான மற்றும் ஊக்கமளிக்கும் பயணத்தின் விவரங்களையும் பிரதமர் மோடியுடன்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## 2014, 2015ஆம் ஆண்டுகளில்

# சதொசவிற்கு அரிசி இறக்குமதியால் 151.57 மில்லியன் ரூபா நிதி இழப்பு

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையானகொள்வனவுநடைமுறைகளுக்கு முரணாகஅரிசி இறக்குமதிசெய்யப்பட்டதன் காரணமாக லங்கா சதொசவிற்கு 151.57 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக கோப் குழுவில் தெரியவந்தது.

லங்கா சதொச லிமிடெட் நிறுவனத்தின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயற்திறனை ஆராய்வதற்காக, நாடாளுமன்றத்தின் அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழு, அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியபோது இந்த விடயங்கள் புலப்பட்டன.

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்காக ரூ. 27,011,980, 142 செலவிடப்பட்ட போதிலும், அந்த அரிசிக் கையிருப்பை விற்பனை செய்ததன் மூலம் ரூ. 11,854,949, 124 மாத்திரமேவருமானம்ஈட்டப்பட்டுள்ளதுஎன இதன்போது கோப் குழு சுட்டிக்காட்டியது.

அதற்கமைய, உள்நாட்டு அரிசிச் சந்தை நிலைமை, நெல் அறுவடை மற்றும் அரிசிக்கான களஞ்சிய வசதிகள் குறித்து முறையான ஆய்வு மேற்கொள்ளாமல், முறையானகொள்வனவுநடைமுறைகளுக்கு முரணாக அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் சதொச நிறுவனத்திற்கு சுமார் ரூ. 15,157,031,018 நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் குழு சுட்டிக்காட்டியது.

இது தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டதா என்று அதிகாரிகளிடம் குழு வினவியபோது, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்வதற்கு வழங்கியுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், முறையான கட்டுமானங்களை மேற்கொள்ளாத 18 கட்டட உரிமையாளர்களிடமிருந்து நிறுவனத்திற்குச் சேர வேண்டிய நிதி இன்னும் அறவிடப்படவில்லை என்று கோப் குழு சுட்டிக்காட்டியது.

கட்டடங்களை வாடகைக்கு எடுக்கும் நிறுவனத்தின் வழிகாட்டுதல்களின்படி, எதிர்காலத்தில் கடைகள் ஆரம்பிக்கும் அனுமானத்தின் பேரில், கட்டடங்கள் இல்லாத வெற்று நிலங்களுக்கு முற்பணம் செலுத்தக்கூடாது என்றாலும், 2020 டிசம்பர் 31 ஆம் திகதிவரை 29 ஒப்பந்தங்களின் கீழ்,மதிப்பீடு பெறப்படாமல், கட்டட நிர்மாணங்களுக்காக ரூ. 34,234,996 முற்பணமாகச் செலுத்தப்பட்டுள்ளது என்று குழு சுட்டிக்காட்டியது. அதற்கமைய, இவ்வாறுநிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களில் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் கட்டுமானங்களை மேற்கொள்ளாத 18 நிறுவன உரிமையாளர்களுக்கு எதிராக ரூ. 27,435, 000 அறவிடுவதற்காக நிறுவனம் வழக்குத் தொடர்ந்துள்ளது என்று இதன்போது புலப்பட்டது.

மேலும், அத்தியாவசிய பதவிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் அதிகாரிகள் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய குழு, இந்தத் தற்காலிக ஆட்சேர்ப்பு காரணமாக அதிகாரிகள் அடிக்கடி மாறுவதால் நிறுவனத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பான சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று சுட்டிக்காட்டியது. அதற்கமைய, இந்த நிலைமை தற்போது புரிந்து கொள்ளப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் இந்த நியமனங்களின் காலத்தை 5 ஆண்டுகள் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், தற்காலிக நியமனங்கள் உள்ளிட்ட வேறு சில நியமனங்களுக்காக திறைசேரியின் அனுமதியின்றி வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் குறித்தும் குழு இங்கு சுட்டிக்காட்டியதுடன், இந்த நிலைமைகளை முறைமைப்படுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்தியது. இதற்கு மேலதிகமாக, நிறுவனத்தின் ஒருங்கிணைந்த நிறுவன வளத் திட்டமிடல் முறைமை தொடர்பான பிரச்சினைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன் இந்த முறைமையை விரிவுபடுத்துவதற்காக அதிக செலவு செய்யப்பட்ட போதிலும் சில தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதும் இங்கு வெளிப்படுத்தப்பட்டது.

இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியதன் பின்னர், எதிர்காலத்தில் ஒரு பொறுப்புள்ள நிறுவனமாக சதொச கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று குழுவின் தலைவர் வலியுறுத்தினார். இதற்காக அதிகாரிகளின் அர்ப்பணிப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## டிஜிட்டல் பாதுகாப்பு

இலங்கை, தன் பொருளாதார மீட்சிக்கான புதிய நம்பிக்கையை ‘டிஜிட்டல் பொருளாதார வளர்ச்சி’ என்ற திசையில் வைத்து உள்ளது. தொழில்நுட்பம், தரவு, செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றை தழுவி முன்னேறுவதே நவீன உலகின் அடையாளமாக மாறியுள்ள நிலையில், இலங்கையும் அதன் ஓர் அங்கமாகத் திகழ விரும்புகிறது. ஆனால், டிஜிட்டல் முன்னேற்றத்தின் பாதை சுலபமல்ல– அதில் மறைந்திருக்கும் மிகப் பெரிய ஆபத்து ‘சைபர் பாதுகாப்பு’ எனும் மாயவலைதான்.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒரு (Serendipity Knowledge Programme) மாநாடு, இத்திசையில் ஒரு முக்கியமான விழிப்புணர்வை உருவாக்கியது. ‘சைபர் பாதுகாப்பு மற்றும் தரவு பாதுகாப்பு’ என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கை அரசின் அதிகாரிகள், தொழில்நுட்ப நிபுணர்கள், ஜப்பான் அரசின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தங்கள் பார்வைகளை பகிர்ந்தனர். இதன் மூலம் இலங்கை எதிர்காலத்தில் டிஜிட்டல் முன்னேற்றத்துடன் பாதுகாப்பையும் இணைக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தியது.

### சைபர் பாதுகாப்பு - வளர்ச்சியின் அவசியமான அச்சம்

இன்றைய உலகில் பொருளாதாரம், கல்வி, வர்த்தகம் என அனைத்தும் இணையத்தின் வழியே இயங்குகின்றன. ஆனால், இதே இணையமே நாடுகளின் பாதுகாப்பிற்கே சவாலாக மாறியுள்ளது. இலங்கையின் துறைமுகங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், தரவு மையங்கள், மற்றும் உலகத்துடன் இணைக்கும் கடல் அடித் தரவு கேபிள்கள்– இவை அனைத்தும் நாட்டின் உயிர்நாடிகளாகும். இவற்றில் ஏதேனும் ஒன்று பாதிக்கப்படுமானால், பொருளாதாரம் மட்டுமல்லாது, தேசிய பாதுகாப்பே கேள்விக்குறியாகிவிடும்.

இத்தகைய முக்கிய அடித்தளங்களுக்குக் கடுமையான சட்டப் பாதுகாப்போ அல்லது கண்காணிப்பு அமைப்போ இல்லாத நிலை, இலங்கையின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. பலமுறை, வெளிநாட்டு தாக்குதல்கள், தரவு திருட்டுகள், அல்லது நெட்வொர்க் முடக்கம் போன்ற சம்பவங்கள் நிகழ்ந்தும், அதிலிருந்து பாடம் கற்க அரசாங்கம் மெதுவாகவே நடந்துள்ளது.

### அறிவு, சட்டம், விழிப்புணர்வு - முன்னேற்றத்தின் மூன்று தூண்கள்

இலங்கையின் தகவல் தொடர்பு தொழில்நுட்ப முகமைத் தலைவர் டாக்டர் ஹன்ஸ் விஜயசூரிய கூறியதுபோல், இலங்கை ‘சிறிய படிகள்’ வழியாக அல்லாது, ‘பெரிய தாவலால்’ மாற்றத்தை அடைய வேண்டும். அதாவது, உலகத் தரத்தில் வேகமாகவும் விரிவாகவும் டிஜிட்டல் மாற்றத்தை ஏற்க வேண்டியது அவசியம். ஆனால் அதற்கான அடித்தளம் சைபர் பாதுகாப்பும் தரவு பாதுகாப்பும் ஆகும்.

அதற்காக, தகுந்த சட்டங்களும் ஒழுங்குமுறை அமைப்புகளும் உருவாக்கப்பட வேண்டும். இன்று பல நிறுவனங்களும், அரசுத்துறைகளும் ‘தரவு பாதுகாப்பு சட்டம்’ பற்றிய தெளிவற்ற நிலையில் உள்ளன. இதனை விரைவாக சீரமைக்காவிட்டால், நம் டிஜிட்டல் பொருளாதாரம் வெளிநாட்டு தாக்குதல்களுக்கு எளிதாக இரையாகி விடும்.

ஜப்பானின் அனுபவம் இங்கு பாடமாகும். அந்த நாடு ஆரம்பத்திலிருந்தே சைபர் பாதுகாப்பை தேசிய முன்னுரிமையாகக் கொண்டு, அமைச்சரவை மட்டத்திலான கண்காணிப்பு அமைப்பை நிறுவியுள்ளது. அரசும் தனியாரும் ஒருங்கிணைந்த பாணியில் செயற்படுகின்றனர். இலங்கையும் இதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நேரம் இது.

ஒரு டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவது தொழில்நுட்பம் மட்டுமல்ல; மனித அறிவும் அவசியம். நாட்டின் இளைஞர்கள், அரசு ஊழியர்கள், தொழில்துறையினர்– அனைவரும் சைபர் விழிப்புணர்வில் ஈடுபட வேண்டும். கல்விக் கட்டமைப்புக்குள் சைபர் பாதுகாப்பு பாடங்கள் சேர்க்கப்பட வேண்டும். ஊடகங்கள் வழியாகவும் பொதுமக்களுக்கு சைபர் ஒழுக்கம், பாதுகாப்பு நெறிகள், தரவு பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வும் பரவலாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

இது வெறும் தொழில்நுட்பப் பிரச்சினை அல்ல; இது தேசிய பாதுகாப்புடன் இணைந்த ஒன்று. நம் எதிர்கால பொருளாதாரம் ‘நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும்’ இயங்க வேண்டுமெனில், இந்த விழிப்புணர்வு பணிகள் அடிப்படையாக அமைய வேண்டும்.

### டிஜிட்டல் முன்னேற்றம் - பாதுகாப்புடன் சேரும் போது மட்டுமே வெற்றி

டிஜிட்டல் இலங்கை எனும் கனவு வெறும் இணைய இணைப்போ அல்லது மொபைல் பயன்பாடுகளோ அல்ல. அது ஒரு முழுமையான அமைப்பு – அதில் சட்டம், தொழில்நுட்பம், கல்வி, பாதுகாப்பு என அனைத்தும் ஒன்றிணைய வேண்டும். சைபர் பாதுகாப்பு இல்லாத டிஜிட்டல் முன்னேற்றம் மணல்மேல் கட்டப்படும் அரண்மனை போலவே சிதைந்து போகும்.

இலங்கையின் எதிர்காலம் இன்று தீர்மானிக்கப்படுகிறது. தொழில்நுட்பத்தின் வேகத்தோடு நம் பாதுகாப்பு யோசனைகளும் இணைந்தால்தான், ‘டிஜிட்டல் இலங்கை’ உண்மையான பொருளாதார சக்தியாக உருவெடுக்கும்.

அந்த வழியில் நாம் எடுக்கும் ஒவ்வொரு படியும்– பாதுகாப்புடன் இருக்கட்டும்.

# இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இலங்கையைப் பயன்படுத்த அனுமதியோம்

## பிரதமர் ஹரினி கருத்து

இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் இலங்கை மண்ணை ஒருபோதும் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்ற தனது உறுதிமொழியை இலங்கை தொடர்ந்தும் நிலைநிறுத்தி வருவதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய, இந்தியாவானது இலங்கையின் பயணத்தில் உறுதியான பங்காளியாக இருந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது அரசுமுறை டில்லி பயணத்தின் ஓர் அங்கமாக சுமார் 3 தசாப்தங்களுக்கு முன்னர் கல்வி கற்ற டில்லி பல்கலைக்கழகத்தின் இந்துக் கல்லூரிக்கும் சென்றார். அக்கல்லூரியில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தான் அங்கு கற்ற போது பல்வகைத்தன்மையை ஏற்றுக்கொள்வது மற்றும் கடினமான கேள்விகளைக் கேட்பதன் முக்கியத்துவம் ஆகியவை இந்தியா குறித்த தனது மனதில் நீடித்த நினைவுகளாக இருப்பதாக தெரிவித்தார்.

முதல்முறையாகத் தான் டில்லிக்குள் நுழைந்தபோது கனவுகள், நிச்சயமற்ற தன்மைகள், நம்பிக்கைகள், கேள்விகள் மற்றும் சிறிய நடுக்கம் ஆகியவற்றின் கலவையுடன் இருந்தார் என்பதை நினைவுகூர்ந்த அவர், டில்லி தன்னை ஏற்றுக்கொண்டு, சொந்த வீட்டில் இருப்பது போன்ற உணர்வை அளித்ததாகக் கூறினார். இந்த பல்வகைத் தன்மையை ஏற்றுக்கொள்வதுதான் டில்லியை தனித்துவமாக்குகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தனது ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்த அவர், ‘அவர்கள் எனக்கு வெறும் கோட்பாடுகளை மட்டும் கற்பிக்கவில்லை, மாறாக விமர்சன ரீதியாக சிந்திக்கவும், கேள்வி கேட்கவும், அநீதியை ஒருபோதும் தவிர்க்க முடியாததாக ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கவும் என்னை ஊக்குவித்தனர்’ என்று கூறினார். சமத்துவமின்மை, பெண்ணியம் மற்றும் மனித மேம்பாடு குறித்த கல்லூரி உரையாடல்கள் அவசரமானதாகவும் அவசியமானதாகவும் உணர்ந்ததாக அவர் நினைவு கூர்ந்தார்.

‘எனது கல்விப் பயணத்தை இப்போது நினைத்துப் பார்க்கையில், நான் சமூகவியல் கற்பித்தாலும், அல்லது அதிருப்தி, சமூக நீதி, பாகுபாடு அல்லது மனித உரிமைகள் குறித்து ஆராய்ச்சி செய்தாலும், இந்துக் கல்லூரியில் எனக்கு புகட்டப்பட்ட கல்வி சார்ந்த புரிதல்கள் என்னை விட்டு ஒருபோதும் விலகவில்லை என்று நினைக்கிறேன்’ என்றும் அவர் கூறினார். ‘இந்துக் கல்லூரியில் என் மனதில் உருவான ஒரு உண்மையை இந்த அனுபவங்கள் ஒவ்வொன்றும் வலுப்படுத்தின. அவை என்னவென்றால், செயலற்ற அறிவு முழுமையற்றது, மேலும் கல்வி நம்மைப் பின்தங்கியவர்களுக்கு சேவை செய்ய கடமைப்படுத்துகிறது என்பதே ஆகும். அத்துடன், கடினமான கேள்விகளைக் கேட்கும் சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்றும் மாணவர்களை அவர் வலியுறுத்தினார். அதேவேளை அவர் தனது உரையில் இந்தியா - இலங்கைக்கிடையிலான பிணைப்பு தொடர்பிலும் முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டினார். இந்தியா - இலங்கை கூட்டுறவு தற்காலிகமானதல்ல ஆனால் கட்டமைப்பு ரீதியானது. இது இன்றைய தற்காலிக வசதியல்ல, மாறாக நாளைய அத்தியாவசியம்’ என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தியாவானது இலங்கையின் பயணத்தில் உறுதியான பங்காளியாக இருந்து வருவதாகவும், அதன் பொருளாதார மீட்சியை ஆதரிப்பதாகவும், நெருக்கடியான காலங்களில் முக்கியமான உதவிகளை வழங்குவதாகவும், ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கான முயற்சியில் இலங்கையுடன் நிற்பதாகவும் அவர் கூறினார். அதேவேளை ‘இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் இலங்கை மண்ணை ஒருபோதும் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்ற தனது உறுதியான உறுதிமொழியை இலங்கையும் தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறது‘ என்றும் அவர் தெரிவித்தார்.

# தான் பட்டம் பெற்ற கல்லூரியில் பிரதமரின் மலர்ந்த நினைவுகள்

இந்தியாவுக்கு அரசுமுறைப் பயணமாகச் சென்றுள்ள பிரதமர் ஹரிணி, தான் சமூகவியலில் இளங்கலைப் பட்டம் பெற்ற டெல்லி பல்கலைக்கழகத்தின் இந்துக் கல்லூரிக்கும் நேரில் சென்றார்.

கல்லூரி நிர்வாகம், துறைசார் ஆசிரியர்கள் மற்றும் தற்போதைய மாணவர்கள் ஆகியோர் பிரதமரை அன்புடன் வரவேற்றனர். பிரதமரின் வெற்றிகளைப் பாராட்டும் வகையில், கல்லூரி நிர்வாகம் ‘ஹரிணி அமரசூரிய சமூக மற்றும் இனவியல் ஆராய்ச்சி ஆய்வகத்தை‘ திறந்து வைத்தது.

அதையடுத்து, பிரதமர் தான் ஒரு காலத்தில் கல்வி கற்ற வகுப்பறைகளுக்கு மீண்டும் சென்று பார்த்தார். அத்துடன்,மாணவியாகத் தான் இருந்த காலத்தை நினைவுகூர்ந்து தனது எண்ணங்களை அங்கு கூடியிருந்தவர்களுடன் பகிர்ந்துகொண்டார். இந்து கல்லூரியில் தான் பெற்ற கல்வியானது, கல்விப் பயணம், சமூக நீதி, சமத்துவம் மற்றும் கல்விச் சீர்திருத்தம் மீதான தனது வாழ்நாள் அர்ப்பணிப்பை எவ்வாறு வடிவமைத்தது என்பதையும் அவர் நினைவுகூர்ந்தார்.

அவ் வரவேற்பு விழாவில் கல்லூரி மாணவர்களிடையே உரையாற்றிய பிரதமர், ‘கல்வி என்பது வெறுமனே தமது எதிர்காலத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கானது மட்டுமல்ல, மற்றவர்களின் எதிர்காலத்தை மாற்றுவதற்கு நம்மைத் தயார்படுத்துவதுமாகும்’ எனக் குறிப்பிட்டார். அத்துடன், அனைவரையும் உள்ளடக்கிய, சமத்துவம் மிக்க சமூகங்களை உருவாக்குவதில் கருணை, ஜனநாயகம் மற்றும் செயல் திறன் மிக்க குடிமகனாக இருப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

இந்து கல்லூரிப் பயணத்தை அடுத்து பிரதமர், 2015 ஆம் ஆண்டில் திட்டமிடல் ஆணைக்குழுவிற்குப் பதிலாக நிறுவப்பட்ட, இந்திய அரசின் கொள்கை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் சென்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மகிந்தவின் பாதுகாப்பு அதிகாரியின் விளக்கமறியல் ஒக். 31 வரை நீடிப்பு

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி ஓய்வு பெற்ற இராணுவலெப்டினன்ட்கோ்ணல்வன்னியாராச்சிநெவில் என்னும் நெவில் வன்னியாராச்சியின் விளக்கமறியல் காலம் ஒக்டோபர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு முதன்மை நீதிவான் அசங்க எஸ் போதரகம முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 127(1) (ஈ) மற்றும் (எ) இணைப்பிரிவுக்கமைய குற்றமிளைத்ததன் காரணமாக ஓய்வு பெற்ற இராணுவ லெப்டினன்ட் கோ்ணல் நெவில் வன்னியாராச்சி செப்டம்பர் 2 இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அழைப்பானையின் பேரில் விசாரணைக்காக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்த அவரை விசாரணைகளுக்கு ஒத்துழைக்காத குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது.

28 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதிமிக்க சொத்துக்களை ஈட்டிய விதம் குறித்து உறுதிப்படுத்தப்பட்ட காரணங்களை அவர் வெளியிடவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் 2024 டிசெம்பர் மாதம் முறைகேடான விதத்தில் சொத்து சேகரித்தமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகப் குற்றப்புலனாய்வு பிரிவு சந்தேகநபருக்கு அழைப்பு விடுத்திருந்தது. இந்நிலையில் மேற்படி குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதிவான் மன்றத்தில் விசாரிக்கப்பட்டது.

இதன்போது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் பிரதிவாதி சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி முன்வைத்த வாதங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த நீதிவான் சந்தேகநபரின் விளக்கமறியல் காலத்தை நீடித்து உத்தரவிட்டார்.

# கொலைச் சந்தேகநபரான ஹெலம்பே ரமேஷ் கைது

மித்தெனிய பகுதியில் இரு இளைஞர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி படுகொலை செய்த சம்பவம் மற்றும் வீரகெட்டிய பகுதியில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து 1.5 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் மற்றும் தங்க நகைகளை திருடினானர் எனத் தெரிவிக்கப்படும் 'ஹெலம்பே ரமேஷ்' தங்காலை குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீரகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்காலை குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் அடங்கிய குழுவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்து வியாழக்கிழமை (16) சந்தேகநபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வருடம் ஜூன் 25 மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றிருந்த இரட்டைப் படுகொலைக்கு 'ஹெலம்பே ரமேஷ்' என்னும் புனைப்பெயரால் அறியப்படும் நபர் உதவி ஒத்தாசை வழங்கியுள்ளார் என்று விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. சந்தேகபர் 32 வயதுடைய மெதமுன வீரகெட்டிய பகுதியை சேர்ந்தவராவார்.

செப்டம்பர் 9 சிகரெட் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக சந்தேகபர் வீரகெட்டிய பெதிகம பகுதிக்கு வருகைத் ந்துள்ளார். இந்நிலையில் அங்கு மேல் மாடியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து 152,80.000 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள், பணம் மற்றும் பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றார் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வீரகெட்டிய பெதிகம பகுதியில் வேன் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த சந்தேகநபரை தடுத்து நிறுத்தி தங்காலை குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகள் குழுவினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டபோது சந்தேகநபரிடமிருந்து 50 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. வானில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 9 எம்.எம். ரக 13 தோட்டாக்கள், ரி-56 ரக துப்பாக்கித் தோட்டாக்கள் 2 என்பன மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின்போது தெரியவந்த தகவல்களுக்கமைய, திருடப்பட்டதாகக் கூறப்படும் ஒரு சைக்கிள், திருடப்பட்ட பொருட்களை விற்பனை செய்து பெறப்பட்ட 2.1 மில்லியன் ரூபா மதிப்புள்ள வான், 1.75 மில்லியன் ரொக்கப் பணம். தங்க ஆபரணங்கள் மற்றும் ஒரு வெட்டுக் கத்தி ஆகியன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே சந்தேகநபரான 'ஹெலம்பே ரமேஷ்'க்கு எதிராக திருட்டு மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், மித்தெனிய தொரகொலயாவில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் சந்தேகநபர்களுக்கு மோட்டார் சைக்கிளை வழங்கியவர் 'ஹெலம்பே ரமேஷ்' என முதற்கட்ட விசாரணையில் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஹக்மனாவில் நடைபெற்ற விழா ஒன்றில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு ஈடாக தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் சந்தேகநபரான தெம்பிலி லஹிருவிடம் இருந்து போதைப்பொருள் பெறப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. குறித்த சந்தேகநபர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின்போது வீரகெட்டிய, ஹுங்கம மற்றும் ஹக்மன ஆகிய பகுதிகளில் இரவு நேரங்களில் வீடுகளின் கதவு மற்றும் ஜன்னல்களை உடைத்து பணம், தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருட்கள் மற்றும் மோட்டார் சைக்கிளையும் திருட்டி வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722

## இந்தியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹரினி பகிர்ந்து கொண்டார்.

புத்தாக்க கல்வி நடைமுறைகளைக் கண்டறிவதற்கான அர்த்தமுள்ள ஒரு வாய்ப்பாக, டில்லியில் உள்ள ஒரு மாதிரிப் பாடசாலைக்கு முன்னதாக தனது வருகையின் முக்கிய விடயங்களையும் அவர் இந்தியப் பிரதமருடன் பகிர்ந்து கொண்டார்.

பிரதமர் மோடி இலங்கையின் கல்வி சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பிரதமர் ஹறிணி அமரசூரிய, இளைஞர்கள், குறிப்பாக பாடசாலையை விட்டு இடைவிலகியவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்யும் வகையில், ஆண் மாணவர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டியதன் அதிகரித்து வரும் தேவையை வலியுறுத்தி, உள்ளடக்கிய மற்றும் சமமான கல்வி முறையை உருவாக்குவதற்கான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளைப் பகிர்ந்து கொண்டார்.

இரு நாடுகளிலும் மீனவர்களின் நலன் தொடர்பான விடயங்கள் குறித்தும் இரு பிரதமர்களும் கலந்துரையாடியதுடன், இரு தரப்பிலும் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பைப் உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை பிரதமர் கலாநிதி அமரசூரிய வலியுறுத்தினார்.

இரு நாடுகளின் பகிரப்பட்ட அபிவிருத்திப் பயணத்தில் கூட்டாண்மையுடன் இணைந்து பணியாற்றுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை பிரதமர் மோடி மீண்டும் உறுதிப்படுத்தியதுடன், இலங்கையின் தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டை முயற்சியை முன்னெடுப்பதிலும் டிஜிட்டல் நிர்வாகத்தைவலுப்படுத்துவதிலும் இந்தியாவின் ஆதரவை மீண்டும் வலியுறுத்தினார். அனுராதபுரத்தில் உள்ள புனித நகர வளாகத்தின் அபிவிருத்திக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

தீபாவளிப் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, அரசுத் தலைவர் அனுர குமார திசாநாயக்கவின் அன்பான வாழ்த்துக்களை இந்தியப் பிரதமர் மோடிக்கு தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

## அரச காணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் காணிக்கு, முறைப்பாட்டாளர் வரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை வழங்கி இது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தொடக்கத்தில் 35 இலட்சம் ரூபா பணத்தை கப்பமாகக் கோரியுள்ளார்.

பின்னர் அத்தொகையிலிருந்து 10 இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்டுள்ளார். மீதமுள்ள 25 இலட்சம் ரூபா பணத்திலிருந்து 12 இலட்சம் ரூபா பணத்தை பெற முயன்ற சந்தர்ப்பத்தில் வியாழக்கிழமை (16) பிற்பகல் 12.15 மணியளவில் தனமல்வில-வெல்லவாய பிரதான வீதியில் உள்ள எதிலிவெவ நகரில் உள்ள ஒரு உணவகத்தில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். தியலும விவசாய சேவை மத்தியநிலையத்தின் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளராகச் செயற்பட்ட அதிகாரி ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## பெருந்தோட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்பட்ட எழுத்துமூல கோரிக்கைக்கமைய நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு - நாரஹேன்பிட்டவிலுள்ள தொழில் திணைக்களத்தில் சம்பள நிர்ணய சபை கூட்டப்பட்டது. சபைக் கூட்டம் நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

'பெருந்தோட்ட கம்பனிகளின் பிரதிநிதிகள் பங்கேற்காத காரணத்தால் இன்று பேச்சு நடக்கவில்லை. எனினும் விரைவில் மீண்டும் சம்பள நிர்ணய சபையை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தொழில் ஆணையாளர் குறிப்பிட்டார். இன்று எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை. பெருந்தோட்ட கம்பனிகளின் இந்த ஊதாசீனப் போக்கிற்கு தொழில் ஆணையாளரால் சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது 1350 ரூபா அடிப்படை சம்மபளம் வழங்கப்படுகிறது. தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கமைய நியாயமான அடிப்படை சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும். அடிப்படைச் சம்பள அதிகரிப்புக்கு அப்பால் மேலதிக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும் என்றார் இலங்கைத் தொழிலாளர் காங்ரஸின் சிரேஷ்ட சட்ட ஆலோசகர் மாரிமுத்து,

'ஓராண்டின் பின்னர் சம்பள நிர்ணயசபை கூட்டப்பட்ட போதிலும், கம்பனிகள் பங்கேற்காமையால் எந்தவொரு யோசனையையும் முன்வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. அரச உத்தியோகத்தர்களுக்கு 2029ஆம் ஆண்டு வரை சம்பள அதிகரிப்புக்கான நிலையான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்களின் சம்பள விவகாரத்தில் இவ்வாறு திட்டமிட்டு வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் அரசுத் தலைவர், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் விவகாரத்தில் அந்தளவுக்கு அக்கறையின்றி இருக்கின்றாரா?

சம்பளம் மாத்திரமின்றி தொழிலாளர்களுக்கான நலன்புரி விடயத்திலும் கம்பனிகள் உள்ளிட்ட எவருக்கும் அக்கறையில்லை. பல இயற்கை சீற்றங்களால் ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற போதிலும், அவர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படாமை கவலைக்குரியதாகும். இந்த ஆளும்தரப்பாவது இந்த விவகாரத்தில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்றார் விவசாய தோட்ட தொழிலாளர் காங்ரஸ் பிரதிநிதி கிருஸ்ணசாமி,.

'நீதிமன்றத்ததால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் தொகையை அறிவிப்பதற்கான காலக்கெடுவும் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவுக்கு மதிப்பளித்து தொழில் ஆணையாளர் சம்பள நிர்ணய சபையைக் கூட்டியமைக்கு நன்றி கூறுகின்றோம். அவ்வாறிருந்தும் வழமையைப் போன்று முதலாளிமார் சம்மேளனம் சபைக்கு சமூகமளிக்கவில்லை. எனினும் செங்கொடி சங்கத்தின் சார்பில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2000 ரூபா அடிப்படை சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ளோம்.

தேயிலை ஏற்றுமதியூடாக கம்பனிகள் எவ்வாறு இலாபமீட்டுகின்றன என்பது எமக்குத் தெரியும். இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் 9 சதவீத பங்களிப்பினை தேயிலை தொழிற்துறை வழங்குகிறது. ஆனால் பெருந்தோட்ட கம்பனிகள் தாம் நட்டத்தில் இயங்குவதாகவே குறிப்பிடுகின்றன. இம்முறையும் இந்தக் காரணத்தைக் கூறி தப்பிப்பதற்கு நாம் அவர்களுக்கு இடமளிக்கப் போவதில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆளும்தரப்பின் அதிகபட்ச ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்' என்றார். இலங்கை செங்கொடி சங்கத்தின் ஆலோசகர் மேனகா கந்தசாமி.

'அரசுத் தலைவர் அநுரகுமார திஸாசாயக்க அண்மையில் பதுளையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1750 ரூபா சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் கம்பனிகள் அதற்கு மதிப்பளிக்காமல் நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றன. சட்ட ரீதியான அழைப்புக்களை கம்பனிகள் இவ்வாறு புறக்கணித்தால் தொழிலாளர்களின் ஏனைய பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண முடியும்? சிறந்த தீர்வொன்று கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் நாம் இங்கு வருகை தந்த போதிலும், பேச்சு நடத்தக்கூட முடியாத நிலைமை கவலைக்குரியதாகும். நாட்டின் சட்டத்துக்கு மதிப்பளிக்காமல் கம்பனிகள் செயற்படுவதால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது' என்றார் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பிரதிநிதி முத்துக்குமார்.

'பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு இம்முறையும் கனவாகியுள்ளது. தொழிலாளர்கள் ஆதரவின்றி கைவிடப்பட்டுள்ளனர். கம்பனிகள் வருகை தராமையால் எம்மால் எந்தவொரு யோசனையையும் முன்வைக்க முடியாமல் போனது' எனத் தெரிவித்தார் ஸ்ரீலங்கா பொதுஜன பெருந்தோட்ட தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சாந்த சிறிமல்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18 .10.2025இல்